அ.செ.எண்: 21 நாள்: 12.01.17

# பத்திரிக்கை செய்தி

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழைகள் பொய்த்ததின் காரணமாக தற்போது குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலகத்தில் 24 மணி நேரமும் கட்டணமில்லா தொலைபேசி எண். **1077** ___க்கு பொதுமக்கள் தொடர்பு கொண்டு தங்கள் பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சினை குறித்து புகார் தெரிவிக்கலாம். அதுபோலவே கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்படும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலக தொலைபேசி எண்கள் 0422-2303519 மற்றும் **0422-2303509** ஆகிய தொலைபேசி எண்களில் அலுவலக நாட்களில் அலுவலக பணி நேரத்தில் தொடர்பு கொண்டு விபரம் தெரிவிக்கலாம். அதேபோல ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பொதுமக்கள் தங்கள் பகுதிக்கு உட்பட்ட வட்டாரங்களில் அலுவலக வேலை நாட்களில் அலுவலக பணி நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களின் அலுவலக தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு குடிநீர் பிரச்சினை குறித்து பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | கோடு எண் | அலுவலக தொலைபேசி எண்கள் |
|---|---|---|---|
| 1 | அன்னூர் | 04254 | 262244 |
| 2 | ஆனைமலை | 04253 | 282238 |
| 3 | காரமடை | 04254 | 272230 |
| 4 | கிணத்துக்கடவு | 04259 | 242027 |
| 5 | சர்க்கார்சாமக்குளம் | 0422 | 2654222 |
| 6 | சுல்தான்பேட்டை | 04255 | 266235 |
| 7 | சூலூர் | 0422 | 2687238 |

| | | | |
|---|---|---|---|
| 8 | பெரியநாயக்கன்பாளையம் | 0422 | 2692280 |
| 9 | பொள்ளாச்சி (வடக்கு) | 04259 | 224835 |
| 10 | பொள்ளாச்சி (தெற்கு) | 04259 | 224735 |
| 11 | மதுக்கரை | 0422 | 2622237 |
| 12 | தொண்டாமுத்தூர் | 0422 | 2617230 |

மேலும், தற்போது நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டினை கருத்திற்கொண்டு பொதுமக்கள் குடிநீரை சிக்கனமாக பயன்படுத்தவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கோயம்புத்தூர்.

12.1.17

12-1-17